

# அகதியான போது .................



---------------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**

**பாகம் 10**

நமது முஸ்லீம் அமைச்சர்கள் சமூகத்துக்கு செய்ததை விட செய்த சிலவற்றை காட்டி பந்தம் பிடிக்கும் பத்திரிகையாளர்களை வைத்து
செய்திகளில் தமது போட்டோக்களை போட்டு பப்ளிசிட்டி எடுத்து அடுத்த தேர்தலுக்கு தயாராகுவதுதான் அதிகமாக இருந்தது .
ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒவ்வொரு பந்தம் பிடிக்கும் செய்தியாளர்களை வைத்துக்கொள்வார்கள் .வீட்டில் நடக்கும் 'கத்னா'
முதல் தெமட்டகஹா பள்ளி திருவிழா தொடக்கம் அழைப்பிதல் கொடுக்கப்படுவார்கள் .பத்திரிகைக்கு பின்னால் 'பூனைக்குட்டிகள் '
வழங்கி கௌரவிக்கப்படுவார்கள் .அமைச்சர்களுக்கு பிடிக்கும் இந்த பந்தங்களுக்கு பிரதியீடாக தமது சொந்த தேவைகளை அந்த அமைச்சர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வார்கள் .எனக்கு தெரிந்த ஒரு பிரபல பத்திரிகையாளர் அமைச்சர் ஒருவரின் அன்புக்குரிய செல்லப்பிள்ளையாக இருந்ததுடன் , தேர்தல் வேலைகளில் அந்த அமைச்சரின் ஒலிபெருக்கியாக செயற்பட்டு பல தடவை அந்த அமைச்சரை பப்ளிசிட்டி மூலம் வெற்றி பெற வைத்தவர் . அவரது
ஈடு இல்லாத அந்த சேவைக்கு அமைச்சரிடம் கேட்டு வாங்கிக்கொண்டது சொய்சா புறத்திலும் பம்பலப்பிட்டியவிலும் இரு பிளட் வீடுகள்
.இவ்வாறு பந்தம் என்ற சொல்லில் ஊறிப்போனதுதான் இலங்கயின் பத்திரிகைத்துவம் .
நான் பத்திரிகையில் வேலைக்கு சேர்ந்து சில மாதங்களில் எனக்கு பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது.வெளியே சொன்னால் இரண்டில் ஒன்றை தியாகம் செய்ய வேண்டிய நிலை இருந்தது. வாரத்தில் ஒரு முறை மாத்திரம் பல்கலைக்கழகம் சென்று தலையை காட்டி விட்டு வர வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருந்தேன் . நமது நாட்டில் உழைத்துக்கொண்டு படிக்ககூடிய பல்கலைக்கழக கல்வித்திட்டம் இல்லாமையால்தான் பல்கலைக்கழகத்தை முடித்து விட்டு வேலை தேடியலையும் நிலையும்,வேலையில்லா பட்டதாரிகள் தொகையும் அதிகரித்து காணப்படுவதற்கும் காரணமாகும்.பல்கலைக்கழகத்தில் இருந்து கொண்டு வேலை செய்வது என்னோடு வேலை செய்பவர்களுக்கு தெரிந்தால் என் வேலைக்கு நிச்சயம் வேட்டு வைக்கப்படும் அதனால் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகளை பூர்த்தி செய்யும் வரை அந்த விடயத்தை இரகசியமாக வைத்திருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன் .கடைசியில் சில பாடங்களின் விரிவுரைகளுக்கு கட்டாயம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட போது,அந்த செய்தி நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளரை நெருங்கியபோது அவர் கல்விக்கு ஊக்கம் தருபவராக இருந்ததால் விரிவுரைக்கு செல்ல அனுமதியும்,அத்துடன் எனது பல்கலைக்கழக பாடநெறி முகாமைத்துவமாக இருந்ததால் வணிகச்செய்தி ஆசிரியாராகவும் அவர் என்னை பதவி உயர்த்திய போது,ஆசிரியர் பீடம் சற்று ஆடித்தான் போனது.அந்த பதவி பத்திரிகை நிறுவனத்துக்கு

www.padippakam.com

சற்று முக்கியமானதாக இருந்ததால் அதுவும் முஸ்லீமான எனக்கு கிடைத்தபோது பலர் என்னிடம் வந்து, மதுபானம் அருந்தாத உங்களுக்கு இந்த பதவி கிடைக்காமல் எங்களுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்று நேராகவே சொன்னது இன்னமும் ஞாபகம் இருக்கிறது.வணிகச்செய்தி ஆசிரியராக இருக்கும் போது பல உயர்தர வணிகப்புள்ளிகளை சந்திக்க சந்தர்ப்பம் கிடைப்பதும், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு அடிக்கடி செல்ல வாய்ப்புக்கள் கிடைப்பதும் அந்த பதவிக்கு பலரை போட்டி போட வைத்திருந்தது

தமிழ் பத்திரிகைகளில் முஸ்லீம் பத்திரிகையாளர்கள் பல சவால்களை எதிர் நோக்கினார்கள் அதிலும் முஸ்லீம் பத்திரிகையாளர்கள் ஓரம் கட்டப்பட்ட பல நிகழ்ச்சிகள் இலங்கையின் தேசிய பத்திரிகை வரலாற்றில் காண முடியும்

அன்றொரு முறை இலங்கையின் தேசிய தொலைக்காட்சி சேவையில் 'சின்னத்தம்பி' என்ற பெயர் கொண்ட ஒருவரின் தொடராக நடைபெறும் அரசியல் வாதிகளை கேள்வி கேட்கும் நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தேன் . அங்கு கலந்து கொண்ட யாழ் எம் பீ ஒருவரிடம் வழமைபோல பலர் கேள்வி கேட்டனர் . வடக்கு முஸ்லீம்கள் தொடர்பாக கேள்வி கேட்க நான் எழுந்தபோது அந்த ‘சின்ன தம்பி ’ அந்த கேள்வி கேட்க விடாமல் இடைமறித்து இன்னொருவருக்கு சந்தர்ப்பம் கொடுத்தார் .மீண்டும் ஒரு முறை கேட்ட முயன்றும் பயன் இல்லை .வடக்கு முஸ்லீம்களின் பிரச்சினை தேசிய தொலைக்காட்சியில் அதுவும் தான் நடத்தும் நிகழ்ச்சியில் , கேட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் பிரபலமான அந்த ‘சின்ன தம்பி ’

செய்தி நிறுவனம் தமது மலை நாட்டவர்களுக்கு முக்கியம் கொடுக்க வேண்டும் என்பதை தமது கொள்கையாக கொண்டிருந்தது .அங்கு வேலை செய்வோர் தமிழர்களின் வடக்கு - கிழக்கு பிரச்சினையை முக்கியம் கொடுப்பதில் தீவிரமாக இருந்தார்கள் .மொத்தத்தில் பாதிக்கப்பட்டதும் ,பிரச்சினைகள் கொண்டு வரப்படாத மக்களாகவும் இருந்ததும் முஸ்லீம்களின் பிரச்சினைகளே .இதற்கு உதாரணமாக மாவனெல்ல கலவரத்தை கூறலாம் . அந்த செய்தி என் கண் முன்னே இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது ..கலவரம் தொடக்கி மூன்று நாள் கழித்தே பிரச்சினை பிரசுரிக்கப்பட்டிருந்தது . கேட்டபோது கலவரம் ஏனைய பகுதிகளுக்கு பரவி விடக்கூடாது எனபதுக்காகத்தான் என்று கொச்சைத்தனமாக பதில் வந்தது .இதே நிலவரம் ,மச்சேளியாவிலோ மாங்குளத்திலோ ஏற்படும்போது இதே கொள்கை பின்பற்றப்பட்டிருக்குமா என்பது கேள்விக்குறியே .

செய்தி ஊடகம் எந்தளவு முக்கியமானது ,சமூக மாற்றத்தில் எந்தளவு சக்தி வாய்ந்தது என்பதை இன்னமும் நமது சமூகம் அறிந்து கொள்ளாதது கவலைக்குரிய விடயம் .இலங்கையில் எழுச்சிக்குரல் போன்ற சக்திவாய்ந்த முஸ்லீம் ஊடகங்கள் நல்ல நோக்கம் கொண்ட அஸ்வர் போன்ற முஸ்லீம் பத்திரிகையாளர்களால் உருவாக்கப்பட்டிருந்த போதும் அவை நமது சமூகத்தில் உள்ள அதே அரைசியல் வாதிகளால் தமக்கு

ஆதரவாக செயற்படவில்லை என்ற ஒரே காரணத்துக்காக நிர்ப்பந்திக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டமை கவைக்குரியது .

இப்படித்தான் ஒருமுறை யாழ்ப்பாண முஸ்லீம்கள் சம்பந்தமான பேட்டி காணலில் ஒரு பிரபல வர்த்தகரை வெள்ளவத்தையில் உள்ள அவரது வியாபார நிலையத்தில் சந்தித்தபோது அவர் என்னை பார்த்து கேட்ட கேவி என்னை அதிர்ச்சியடைய வைத்தது .

‘தம்பி நீங்க நல்ல படிச்சு இருக்கிறீங்க தானே வேற வேல கிடைகாமல பேபரில் வேலைக்கு சேர்ந்தீங்க ‘

நமது சமூகத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் ,முக்கிய முள்ளிகள் என்று கருதப்படும் நபர்களுக்கு உள்ள அறிவை எப்படி மெச்சுவது ???

ஊடகத்துறை சமூகத்துக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை உணராததால்தான் முஸ்லீம்களில் அநேகமானோர் அத்துறையில் இல்லை என்பதும் பிற சமூகங்களாலும் எதிரிகளாலும் நாம் கண்ட

இடங்களில் வேட்டையாடப்படுவதும் கவலைக்குரிய விடயங்கள் .

வழமை போல ஒருமுறை ‘முக்கிய நபர்கள் ’ என்று கருதப்படும் நபர்கள் சிலரை பேட்டி

படிப்பகம்

www.padippakam.com

கண்டு யாழ்ப்பாண முஸ்லீம்கள் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதினேன் .சில மாதங்கள் கடந்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நிருபர் அங்கு வந்து எனக்கு சொன்ன சில விடயங்கள் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது (தொடரும் )

படிப்பகம்